IN THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (P.W.2 )**

Solemnly affirmed and sworn by Tmt.D.Gnanadeepam Grade III Bench clerk on 18.03.2024. in accordance with the provisions of Act XX111.

அசல் வழக்கு எண்– 29/2022

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தமிழ்செல்வி | தாலுகா | |
| தகப்பனார்/கணவர் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வா.சா. 2 முதல் விசாரணை

நான் திருமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் சார்பதிவாளருக்கு பதிலாக அவரது அனுமதிக் கடிதத்துடன் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சார்பதிவாளர் வழங்கிய கடிதத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். ( **18.03.2024 ம் தேதியிட்ட சார்பதிவாளர் வழங்கிய அனுமதிக் கடிதம் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

15.07.2010–ம் தேதியிட்ட ஆவண எண்.693/2010 என்ற எண் கொண்ட ஜெனரல் பவர் பத்திரத்தை நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேனா என்றால் கொண்டுவந்துள்ளேன். மேற்படி பவர் பத்திரமானது செல்லம் என்பவருக்கு பூச்சம்மாள் மற்றும் 4 நபர்கள் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பவர் பத்திரத்தின் உண்மை நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். **(15.07.2010–ம் தேதியிட்ட ஆவண எண்.693/2010 என்ற எண் கொண்ட பவர் பத்திரத்தின் உண்மை நகல் சா.சா.ஆ.2 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது).** என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 மற்றும் சா.சா.ஆ.2 ஆகிய ஆவணங்களில் உள்ள எழுதிக்கொடுத்ததாக ஒப்புக்கொண்ட பூச்சம்மாளின் புகைப்படம் ஒரே புகைப்படம் என்றால் சரிதான். பூச்சம்மாளின் கணவர் பெயராக பொன்னையா நாயக்கர் என்ற பெருமாள் நாயக்கர் என்று மேற்படி இரண்டு ஆவணங்களிலும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

16.05.2013–ம் தேதியிட்ட ஆவண எண்.3971/2013 என்ற கிரைய ஆவணத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன். அதனை நீதிமன்றத்தில் எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். **(16.05.2013–ம் தேதியிட்ட ஆவண எண்.3971/2013 என்ற கிரைய ஆவணம் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி சா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தின் படி குமரம்மாள் என்பவருக்கு பூச்சம்மாள் மற்றும் 4 நபர்கள், அவர்களுடைய பவர் ஏஜெண்டு மூலமா கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

19.04.2000–ம் தேதியிட்ட கிரைய ஆவணமானது கார்த்திகேயன் எனபவருக்கு ஆவண எண்.2262/2000 என்ற எண் கொண்ட ஆவணம் மூலமாக பொன்னுச்சாமி –1, அழகர் நாயக்கர் மகன் ஜெயராமன் –2, அழகர் நாயக்கர் மகன் ஆறுமுகம் –3, பெ.சி.அழகர்நாயக்கர் மகன் ஆறுமுகம் –4, சி.அழகர்நாயக்கர் மகன் பால்ராஜ் –5, சீனிநாயக்கர் மகன் தொத்தன் – 6, பாண்டியநாயக்கர் மனைவி செல்லம்மாள் – 7 ஆகியோர் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். **(19.04.2000 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் உண்மை நகல் சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** சர்வே எண்.60/7 மற்றும் 60/8 ற் கான வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். **(16.03.2024 ம்**

**தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

மேற்படி கிரைய ஆவணத்தில் மேற்படி 7 நபர்களும் கிரைய ஆவணத்தில், "எங்களுக்கு பூர்வீக சொந்தமானதும், எங்களின் 6 நபரின் பாட்டியும் 7 வது நபருக்கு மாமியாருமான பூச்சம்மாள் அவர்களுக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வந்தததும், அவர் ஆயுளுக்கு பின் 67 நபர்களுக்கு பாத்தியப்பட்டும்" என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சா.சா.ஆ.4 ஆவணத்தில் விற்பனை செய்பவர்கள் மற்றும் வாங்குபவர்களின் புகைப்படம் ஒட்டப்படவில்லை என்றால் சரிதான்.

பொதுவாக பதிவேட்டில் உள்ளதை கைப்பட எழுதி நகல் வழுங்கப்படும் என்றால் சரிதான். அவ்வாறு எழுதும்போது தவறு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். பொதுவாக பத்திரம் பதிவு செய்யும்போது சொத்திற்கான பட்டா, சிட்டா, அடங்கல், இறப்புச்சான்றிதழ், வாரிசு சான்றிதழ் போன்ற ஆவணங்களை பெற்று ஆய்வு செய்வது வழக்கம் என்றால் சரிதான். சா.சா.ஆ.4 வது ஆவணம் பதிவு செய்யப்பட்ட போது மேற்படி ஆவணங்களை பார்த்தார்களா என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சர்வே எண்.60/7 என்பது முழு ஸ்தலமாக இருக்கும் பட்சத்தில் முழு ஸ்தலமாகவே பதிவு செய்யலாம் என்றால் சரிதான். அதே போன்று சர்வே எண்.60/7 என்பது பிரிக்கப்பட்டு விட்டால் ஒரே ஆவணமாக பதிவு செய்யலாமா என்றால் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் பதிவு செய்வோம்.

சா.சா.ஆ.4 ஆவணத்தில் பத்திரத்தை தயாரித்த நபரின் பெயரோ, விலாசமோ குறிப்பிடபடவில்லை என்றால் மேற்படி ஆவணத்தில் உள்ள எழுத்துக்கள் எனக்கு புரியவில்லை அதனால் உறுதியாக

சொல்லமுடியவில்லை. வால்யூம்மை பார்த்தால் சொல்லமுடியும். சா.சா.ஆ.4 ஆவணத்தில் அசல் ஆவணம் பிரதிவாதி கார்திகேயனிடம் இருக்கும் என்றால் சரிதான். 2000–ம் வருடத்தில் தட்டச்சு செய்யும் முறை இருந்ததா என்றால் இருந்தது. தட்டச்சு செய்யப்பட்ட நகலை வால்யூம்மில் வைக்க வேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வால்யூம்மில் கையில் தான் எழுதுவார்கள். நகல் எடுத்து வைக்கும் பழக்கம் இருந்தது என்றாலும், நான் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

பத்திரம் பதிவு செய்யும்போது எழுதிக்கொடுக்கும் நபர், எழுதி வாங்கும் நபர், பத்திரம் எழுதும் நபர், அவரது முகவரி மற்றும் லைசென்ஸ் நம்பர், சாட்சிகளின் விபரங்களை சரிபார்த்து தான் பத்திரம் பதிவு செய்வோம் என்றால் சரிதான். பொதுவாக பத்திரம் எழுதும் நபரின் பெயர் குறிப்பிடபடவில்லை என்றால் பதிவு செய்யமாட்டோம் என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வா.சா.2 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)